A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

## <u>மேல்முறையீட்டு மனு எண் 44 / 2023</u>

திருமதி S. ரேகா,
121/75A, 1st Cross, New Fair lands,
சேலம் – 636 106.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு S. மதன்)

எதிர்

1. உதவி மின்பொறியாளர்/தொழிற்பேட்டை/கப்பலூர்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS வளாகம், தொழிற்பேட்டை,
கூத்தியார்குண்டு, கப்பலூர் – 625 008.

2. செயற்பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS வளாகம், உசிலம்பட்டி ரோடு,
திருமங்கலம் – 625 706.

3. மேற்பார்வை பொறியாளர்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ரேஸ் கோர்ஸ் ரோடு, K, புதூர், மதுரை – 625 007.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு P. முத்தரசன், செயற்பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம்
திரு S. மூர்த்தி, உதவி மின்பொறியாளர்/தொழிற்பேட்டை/கப்பலூர்)

## <u>மேல்முறையீட்டு மனு எண் 45 / 2023</u>

திருமதி M. அம்சபிரபா,
121/75A, 1st Cross, New Fair lands,
சேலம் – 636 106.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு S. மதன்)

எதிர்

1. உதவி மின்பொறியாளர்/தொழிற்பேட்டை/கப்பலூர்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS வளாகம், தொழிற்பேட்டை,
கூத்தியார்குண்டு, கப்பலூர் – 625 008.

2. செயற்பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS வளாகம், உசிலம்பட்டி ரோடு,
திருமங்கலம் – 625 706.

3. மேற்பார்வை பொறியாளர்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ரேஸ் கோர்ஸ் ரோடு, K, புதூர், மதுரை – 625 007.

. . . எதிர்மனுதாரர்கள்

(திரு P. முத்தரசன், செயற்பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம்
திரு S. மூர்த்தி, உதவி மின்பொறியாளர்/தொழிற்பேட்டை/கப்பலூர்)

<u>மனு பெறப்பட்ட நாள்: 12-06-2023</u>

<u>கேட்புரை நாள்: 16-08-2023</u>

<u>ஆணை நாள்: 30-08-2023</u>

12.06.2023 அன்று பெறப்பட்ட திருமதி S. ரேகா மற்றும் திருமதி M. அம்சபிரபா அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 44/2023 மற்றும் 45/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டு எண் 44/2023 மற்றும் 45/2023-இல் கோரிக்கை சம்பந்தமான பொருள் பொதுவாக இருப்பதால் இவ்விரண்டு முறையீடுகளும் ஒன்றாக ஒரே சமயத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மேற்கண்ட மனுக்களின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 16.08.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் இரண்டு முறையீட்டுகளுக்கும் பொதுவான கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**மேல்முறையீட்டு எண் 44/2023 மற்றும் 45/2023 –க்கான பொதுவான ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மின் இணைப்பு எண் 136–004–269–இல் தணிக்கை குழுவின் அறிக்கையின்படி தெரிவித்துள்ள நிலுவைத் தொகையை ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 BOAB AUDIT தணிக்கை அறிக்கையின்படி தெரிவித்துள்ள நிலுவைத் தொகை ரூ. 1,55,932/ஐ ரத்து செய்து தரும்படி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளர் வரையறுக்கப்பட்ட மின்பளுவை விட கூடுதலாக மின்பளு பயன்படுத்தியதால் தணிக்கை குழுவினரால் கணக்கீடு செய்து இழப்பீடு தொகை விதித்துள்ளதாகவும், மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் அவருடைய மின் இணைப்பு நிரந்தர மின்துண்டிப்பு செய்த பிறகு காப்புத்தொகையை அவர் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையில் கழித்துக் மீதி இழப்பீட்டுத் தொகை வசூல் செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, தணிக்கை குழுவினரால் விதிக்கப்பட்ட தொகையை தள்ளுபடி செய்ய கோரி மேல்முறையீட்டாளர் மதுரை மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 03.03.2023 அன்றுஅணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், மதுரை மின் பகிர்மான வட்டம் 11.05.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு :**

3.1 மதுரை மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 11.05.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*முறையீட்டாளரின் கோரிக்கையான வாரியத் தணிக்கைக்குழு செலுத்தக் கோரியுள்ள தொகையை தள்ளுபடி செய்யக் கோருவது Lr. No:CFC/Rev/FC/Rev/DFC/Ref/AAO/Asst/F.3A13A2-3B/D775/22, dt:14.11.2022-ன் அடிப்படையில் ஏற்றுக் கொள்ள இயலாது என மன்றம் ஆணையிட்டு மனு முடித்து வைக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 16.08.2023 அன்று கேட்புரை நேரில் நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர்கள் சார்பாக திரு S. மதன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு P. முத்தரசன், செயற்பொறியாளர்/பகிர்மானம்/ திருமங்கலம் மற்றும் திரு S. மூர்த்தி, உதவி மின்பொறியாளர்/தொழிற்பேட்டை/கப்பலூர், மதுரை மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

4.5 மேல்முறையீட்டு மனு எண் 44/2023 மற்றும் 45/2023 ஆகியவற்றில் உள்ள கோரிக்கை ஒன்றாக இருப்பதால் மேல்முறையீட்டு மனு எண் 44/2023-இல் உள்ள வாதங்கள் இங்கு தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

5.0 **<u>மேல்முறையீட்டு மனு எண் 44/2023–இல் உள்ள வாதங்கள்</u>**:

5.1 மதுரை மின் பகிர்மான வட்டம், திருமங்கலம் கோட்டம், கப்பலூர் உபகோட்டம், கப்பலூர் பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட கப்பலூர் பகிர்மானத்தில் மி.இ.எண். 136–004–269 வீ.ப. எண். IIIA(2). 9 HP + 500 Watts = 7.21 K.w–க்கு புதிய மின் இணைப்பு 26.03.2011 அன்று பெற்று விசைத்தறி இயக்கி வருவதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மின் இணைப்பு பெறும்பொழுது நான்கு விசைத்தறிகள் முறையே ஒரு தறிக்கு 2 H.P வீதம் நான்கு தறிக்கு 8 H.P–ம் இதர வகைக்கு 1 H.Pயும் மின் விளக்கு 500 Watts ஆக மொத்தம் 9 H.P +500 Watts = 7.21 K.W பயன்படுத்தி வருவதாகவும், மேற்கண்ட மின் பளுவிலோ, தறிகளிலோ எந்த மாற்றமும் இல்லை எனவும் முறையாக மின்கட்டணமும் தவறாமல் செலுத்தி இருப்பதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 சூழ்நிலை இவ்வாறு இருக்க 2016ம் ஆண்டில் வாரிய தணிக்கை அறிக்கையின்படி கூடுதல் மின்பளு உபயோகப்படுத்தியதாகவும், அதற்காக வீதபட்டி மாற்றம் காரணமாக மின் கட்டண நிலுவை தொகையாக 2014–2015ம் ஆண்டிற்கான BOAB Audit Slip No.67ன் படி ரூ.69,899/– மற்றும் 2016–2017 ஆண்டிற்கான BOAB Audit Slip No.18 இன் படி ரூ.86,039/– செலுத்தப்பட வேண்டும் என கப்பலூர் உதவிப் பொறியாளர் 2016ம் ஆண்டு இறுதியில் கடிதம் அளித்தாகவும், தணிக்கை தொகையினை 15 தினங்களில் செலுத்தாவிடில் மின் இணைப்பு துண்டிக்கப்படும் எனவும் தெரிவித்து இருந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 கூடுதல் பளு இணைக்காத நிலையில் முறையான அறிவிப்பு இல்லாமல் Audit Slip மூலம் செலுத்த கோருவது ஏற்புடையதாக இல்லை என்று முறையீடு செய்ததாகவும், அதற்கு எவ்வித பதிலும் எந்த அதிகாரிகளிடம் இருந்தும் பெறப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேலும் கப்பலூர் சிப்காட் வளாகத்தில் சுமார் 30 எண்ணம் விசைத்தறி கூடங்கள் உள்ளதாகவும், அவற்றில் 8 எண்ணம் விசைத்தறி கூடங்களுக்கும் தனக்கும் ஏற்பட்ட

2014–2015 ஆண்டிற்கான BOAB AUDIT SLIP மற்றும் 2016–2017 ஆண்டிற்கான BOAB AUDIT SLIP பெறப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவ்த்துள்ளார்.

5.6 இந்த சிரமமான சூழ்நிலையில் கப்பலூர் சிப்காட் வளாகத்தில் சுமார் 8 எண்ணம் விசைத்தறி கூடங்கள் உரிமையாளர்களும் சேர்ந்து KAPPALUR INDUSTRIALIST ASSOCIATION இல் தனக்கும் மின்வாரிய 2014–2015 ஆண்டிற்கான BOAB AUDIT SLIP மற்றும் 2016–2017 ஆண்டிற்கான BOAB AUDIT SLIP தொடர்பாகவும் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளை எடுத்துரைத்ததாகவும், இதனை ஏற்றுக்கொண்ட KAPPALUR INDUSTRIALIST ASSOCIATION மேற்பார்வை பொறியாளர், மதுரை மின்பகிர்மான வட்டம், மதுரை அவர்களை 17.03.2020 அன்று நாடி விசைத்தறி கூடங்கள் உரிமையாளர்களுக்கு ஏற்பட்டுள்ள வாரிய தணிக்கை குழு அளித்த தணிக்கை தொகையினை முழுவதும் தள்ளுபடி செய்து தரும்படி கோரிக்கையை கடிதம் மூலம் அளித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 அதன்படி மேற்பார்வைப் பொறியாளர், மதுரை மின்பகிர்மான வட்டம், மதுரை அவர்கள் தலைவர், மதுரை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் கேட்புரை சென்ற 10.09.2020 அன்று நடத்தியதாகவும், அந்த கேட்புரை கூட்டத்தில் KAPPALUR INDUSTRIALIST ASSOCIATION இல் கலந்து கொண்டு தங்களது தொழில்நிலை மற்றும் விசைத்தறிகள் தொடர்ந்து இயக்குவதால், தங்களை அறியாமல் மின்பளு உயர்ந்திருக்கலாம் என தெரிவித்தார்கள் என அவர் தெரிவித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மின்சார வாரியத்தின் சார்பாக வாரிய தரப்பு வாதங்களை எடுத்துக் கூறுகையில், அதிகாரிகள் தொழிற்கூடத்தில் ஆய்வு மேற்கொண்டு விசைத்தறி மின் இணைப்புகளில் பயன்படுத்தப்படும் மின் உபகரணங்களில் மின்பளு சரியாக கட்டுக்குள் இருந்தது என்றும் கூடுதல் பளு ஏதும் இணைக்கப்படவில்லை என உறுதி செய்ததாக தெரிவித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

5.9 பிரச்சனைக்குரிய காலங்களில் தங்களை அறியாமல் மின்பளு உயர்ந்திருக்கலாம் என விசைத்தறி உரிமையாளர்கள் கூறியதாக ஆய்வு மேற்கொண்ட அதிகாரிகள் கூறியதாக தெரிவித்திருந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 KAPPALUR INDUSTRIALIST ASSOCIATION மேற்படி விசைத்தறி மின் இணைப்புகளில் கூடுதல் மின் பளு பழைய தேய்ந்த மின் மோட்டார்கள் மற்றும் ரீவைண்டிங் செய்யப்பட்ட மோட்டார்கள் பயன்பாடு காரணமாக மின்பளு உயர்ந்திருக்கலாம் எனவும், புதிதாக கூடுதல் மின்பளு இணைக்கப்படவில்லை எனவும் தெரிவித்து, விசைத்தறி உரிமையாளர்களுக்கு தெரிவித்த தணிக்கை தொகையை தள்ளுபடி செய்து தருமாறு கோரியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 அதன்படி மேற்பார்வை பொறியாளர், மதுரை மின்பகிர்மான வட்டம், மதுரை அவர்கள் மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்த தணிக்கை தொகையானது Tariff order dated 11.08.2017க்கு முன்பு 2014–2015 மற்றும் 2015–2016 ஏற்பட்ட நிகழ்வுகள் தொடர்பாகத்தான் TARIFF ORDER DATED 11–08–2017 இல் மின்பளு 10 H.P இல் இருந்து 15H.P (12 K.W.) ஆக உயர்த்தப்பட்டதாகவும், எனவே 11–08–2017 க்கு முன்பு 2014–2015 மற்றும் 2015 – 2016 ஏற்பட்ட நிகழ்வுகள் தொடர்பாக இம்மன்றத்தில் முடிவு எடுக்க முடியாது எனவும், கொள்கை அடிப்படையில் எடுக்கப்படவேண்டிய முடிவு என தங்களது தீர்ப்பு கடிதம் க.எண்.தலைவர்/தமிநுகுதீம/மது/செய/கோ.தமிநுகுதீஆணை/அ.எண். 825 /20, நாள் 23–12–2020, மூலம், KAPPALUR INDUSTRIALIST ASSOCIATION க்கு தெரிவித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 ஆனால் மேற்கண்ட தீர்வுக்கு, KAPPALUR INDUSTRIALIST ASSOCIATION அவர்கள் சென்னை தமிழ்நாடு மின்சார மக்கள் குறைதீர்க்கும் மன்றத்தில் முறையீடு செய்யவில்லை எனவும், இதன் பின், மேற்பார்வைப் பொறியாளர், மதுரை மின்பகிர்மான வட்டம், மதுரை அவர்கள், கஎண். மே.பொ/மமிபவ/மது/வஓபி/கமே/ உ4/கோ.PL /அ.எண். 175/2022, நாள் 26.08.2022 மூலம் தலைமை நிதிக்கட்டுப்பாடு அதிகாரி சென்னை அவர்களுக்கு 26.08.2022 கடிதம் அனுப்பியுள்ளதாகவும், அதில் 2014–2015 ஆண்டிற்கான BOAB AUDIT SLIP மற்றும் 2016–2017 – ஆண்டிற்கான BOAB AUDIT SLIP தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சனைகளை களைய தகுந்த அறிவுறை கோரியிருந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 மேலும் அக்கடிதத்தில் விசைத்தறி கூடங்கள் அனைத்திலும் பொருத்தப்பட்டிருந்த மின்மோட்டார்கள் சோதனைகள் செய்யப்பட்டது எனவும், அவை

அனைத்தும் அளவீடுகளில் சரியாக இருந்தது எனவும், கூடுதல் மின் பளு இணைக்கப்படவில்லை எனவும் அறிக்கை அளித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.14 மேற்கண்ட மேற்பார்வைப் பொறியாளர், மதுரை மின்பகிர்மான வட்டம் மதுரை அவர்கள் கடிதத்திற்கு தலைமை நிதிக்கட்டுப்பாடு அதிகாரி சென்னை அவர்கள், Lr.No. CFC/Rev/FC/Rev/DFC/Rev/AAO/Asst/F.3A1 3A2-3B /D.775/22, dt. 14-11-2022 அன்று தனது கடிதத்தில், கீழ்க்கண்டவாறு, அறிவுரை வழங்கியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

*2.0) The regulation 5 (2) ii (b) note under chapter 2 of TN Supply code notified by Honorable Commission states that*

*(2) Excess demand charge*

*Whenever the consumer exceeds the sanctioned demand, excess demand charge shall be:-*

*(ii) In case of LT supply.*

*(a) For Domestic and Agricultural category of service, the excess demand charges shall not be applicable. 1[(b) For other categories of LT services with- contracted demand equal to or less than 18.6 KW (25 HP), the excess demand charges shall not be applicable where the connected load is equal to or less than the contracted demand.*

*Note:*

*For services with contracted demand less than or equal to 18.6 KW (25 HP) whenever the consumer's connected load exceeds the contracted demand, the licensee shall install meters with demand recording facility and bring the consumer under the scope of excess demand chargeable category. After installation of the meter, if the recorded demand is in excess of contracted demand, the existing demand, shall, after intimation to the consumer, be revised to the level of recorded demand and all relevant charges applicable for extension of additional demand shall be included in the next bill.*

*"It is mandatory to provide meters with demand recording facility when the load is below or 18.6 KW or more (25 hp).*

*Whenever the consumer's connected load exceeds the contracted load, the Board shall install meters with demand recording facility and bring the consumer under the scope of excess demand chargeable category."*

என்கிற TNERC அறிவுரைப்படி, கப்பலூர் சிப்காட் வளாகத்தில் BOAB AUDIT SLIP தொடர்பாக ஏற்பட்டுள்ள கூடுதல் மின்பளு பிரச்சனைகள சம்பந்தப்பட்ட விசைத்தறி கூடங்களில், KW DEMAND RECORDING FACILITY உள்ள மின் அளவிகள்

பொருத்தப்பட்டுள்ளதால், கூடுதல் மின்பளு பதிவாகியுள்ள மின்பளுவை கணக்கில் கொண்டு மின்நுகர்வோருக்கு உரிய அறிவிப்பு கடிதம் அளித்து, அதன்பின் தணிக்கை குழு அளித்த, தணிக்கை தொகைக்கு நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.15 உதவி கணக்கு அலுவலர், வருவாய் பிரிவு, திருமங்கலம் அவர்கள், உதவிப்பொறியாளர், கப்பலூர் அவர்களுக்கு அளித்த கடித எண் உ.க.அ/வபி/ திரும/கமே.1/கோ.தணிக்கை/அ.எண்.1375/22, நாள் 22-11-2022 நகலை இணைத்து உதவிப்பொறியாளர் கப்பலூர் அவர்கள் தனது கடித எண் உமிபொ /தொ. பே/கப்/வ.ஆ/கோப்பு (BOAB AUDIT)/ ஆ.எண்.95, நாள் 19-12-2022 மூலம் தங்கள் மின் இணைப்புக்கு அளித்ததாகவும், தணிக்கை தொகையினை 15 தினங்களுக்குள் செலுத்தும்படி கோரியிருந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.16 மேற்கண்டவாறு பெறப்பட்ட உதவி கணக்கு அலுவலர், வருவாய் பிரிவு, திருமங்கலம் அவர்கள், மற்றும் உதவிப் பொறியாளர் கப்பலூர் அவர்கள் கடிதங்களை தொடர்ந்து சென்ற 03-03-2023 அன்று தங்கள் கடிதத்தின் மூலம் மேற்பார்வைப் பொறியாளர், மதுரை மின்பகிர்மான வட்டம், மதுரை அவர்கள் அலுவலகத்தில் உள்ள, தலைவர். மதுரை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு, தங்களுக்கு விதித்த BOAB AUDIT இரு தணிக்கை தொகை ரூ.1,55,932/- ஐ. தள்ளுபடி செய்து தரும்படி பதிவு தபால் மூலம் வேண்டியதாகவும், அக்கடிதத்திற்கான ஒப்புதல் கடிதம் Lr.NO.Chairman/CGRF/MEDC/MDU/EE/GL/TA/F.GCRF/ D.No/432/23, Dt.21-03-2023 மேற்பார்வைப் பொறியாளர், மதுரை மின்பகிர்மான வட்டம், மதுரை அவர்கள் அலுவலகத்தின் மூலம் பெறப்பட்டதாகவும், அவ்வாறு அளிக்கப்பட்ட ஒப்புதல் கடிதம் மூலம், முறையீடு பதிவு எண் 22/2023, எனவும், தெரிவித்து இருந்ததாகவும், இதற்குபின் சென்ற 07.03.2023 அன்று மேற்பார்வைப் பொறியாளர், மதுரை மின் பகிர்மான வட்டம், மதுரை அவர்களுக்கு, தலைவர், மதுரை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு, தங்களால் 03.03.2023 அன்று முறையீடு செய்யப்பட்டுள்ளதால், தணிக்கைத் தொகை நிலுவை முன்னிட்டு தங்களது மி.இ.எண்.136-004-269, வீ.ப.எண். III A(2) ஐ மின் துண்டிப்பு செய்ய வேண்டாம் என கேட்டுக் கொண்டதாகவும்,

ஆனால் அதனை பொருட்படுத்தாமல் மின் துண்டிப்பு செய்துவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.17 மேலும் சென்ற 20.03.2023 அன்று உதவிப் பொறியாளர் கப்பலூர் அவர்களுக்கு பதிவு தபால் மூலம் தங்களது மி.இ.எண்.136-04-251 இல் மின் அளவியில் CMRI மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட ரீடிங் தொடர்பான சங்கதிகள் MRT மூலம் பெறப்பட்ட அறிக்கையின் நகலை தரும்படி வேண்டியதாகவும், அதன் மின்அளவி சரியாக இயங்கியதா என அறிந்துக் கொள்ள முயற்சித்ததாகவும், ஆனால் அறிக்கையின் நகலை இதுநாள் வரை தங்களுக்கு அளிக்கப்படவில்லை எனவும், அப்பொழுதே கேட்டிருந்தால் கொடுத்திருப்போம் அந்த விவரங்கள் 90 நாட்களில் அழிந்துவிடும் என்றும், இனி எடுத்துக் கொடுக்க இயலாது என்றும் வாய்மொழியாக தெரிவித்ததாகவும், இச்சூழ்நிலையில் தங்களால் 03.03.2023 அன்று முறையீடு செய்யப்பட்ட கடிதத்திற்கு தலைவர், மதுரை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் கேட்புரை சென்ற 29.03.2023 அன்று நடத்தியதாகவும், அந்த கேட்புரை கூட்டத்தில் கலந்து கொண்டு Voltage fluctuation காரணமாகவும் MD கூடியிருக்க வாய்ப்பு உள்ளதாகவும், Manual முறையில் Reading எடுப்பதிலும் தவறு நேர்ந்திருக்கலாம் எனவும், தங்களது முறையீட்டை ஏற்று மி.இ.எண்.136-004-269 வீ.ப.எண். III A(2) இன் மீது செலுத்த கோரிய BOAB AUDIT இரு தணிக்கை தொகை ரூ.1,55,392/-ஐ தள்ளுபடி செய்து தரும்படி நேரிடையாக வேண்டியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.18 ஆனால் தங்களது கோரிக்கையை ஏற்று தணிக்கை தொகையை தள்ளுபடி செய்ய மறுத்து தலைவர், மதுரை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தினர் தங்களது தீர்ப்பு கடிதம் க.எண். தலைவர்/தமிநுகுதீம/மது/செய/கோ. தமிநுகுதீ ஆணை/2023/ அ.எண்.721/23, நாள் 11-05-2023, மூலம், தெரிவித்துள்ளதாகவும், எனவே மேற்கண்ட நிகழ்வுகள் அடிப்படையில் தங்களது மேல்முறையீடு தற்பொழுது சமர்பிக்கின்றதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.19 இம்மேல்முறையீடு தொடர்ந்து கீழ்க்கண்ட தகவல்களையும் தெரிவித்துக் கொள்வதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

அ. Tamil Nadu Electricity Regulatory Commission's supply Codes and Regulations (As amended up to 31.03.2015). TAMIL NADU ELECTRICITY SUPPLY CODE, CHAPTER 1: PRELIMINARY

*"2. Definitions*

*(h) "Consumer Meter Card" means a card provided at the low tension consumer's premises for the purpose of recording the measurements relating to consumption of electricity and the charges for electricity consumed and other related charges. It shall also serve the purpose of a notice to the consumer of the due dates for payment and notice period for disconnection.*

*8. Meter Reading, Billing and intervals*

*1 [(1) in the case of Low Tension service connections, the Licensee with the approval of the Commission shall decide the periodicity of meter readings, collection dates, modes etc. However, in the case of temporary Supply, the meter reading shall be taken at the end of the period in case sanction is for less than a month and once in a month in case sanction is for a period more than a month. The Licensee shall have access to the consumer's premises at all reasonable hours for the purpose of such reading as per the provisions contained in section 163 of the Act. The format of the meter cards containing all basic information to be made available to the consumer shall be got approved by the Commission. It is the responsibility of the Licensee to ensure that the details in the respective meter cards are entered without omission.]*

*(4) In case of LT services the meter readings of last digit up to and inclusive of five units shall be rounded off to the lower multiple of ten units and the meter readings of last digit from six to nine units shall be rounded off to the higher multiple of ten units.*

*(5) in case of LT services, after taking the meter readings, the particulars of meter readings, energy consumption and charges payable will be incorporated in the consumer meter card."*

5.20 மேற்கண்ட தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்கல் படி (supply code), மின் இணைப்பு வழங்கப்பட்ட வளாகத்தில் மின் அளவீடுகள் நுகர்வோர் விபரங்கள் மின்பளு வீ.ப எண், டெபாசிட் இருப்புதொகை, மின் இணைப்பு வழங்கப்பட்ட நாள், பிரிவு அலுவலர் கையொப்பத்துடன் கூடிய, METER CARD அளித்து முறையாக பதிவுகள் செய்து கொடுப்பது மின்வாரியத்தின் பொறுப்பு எனவும், ஆனால் தங்களது மின் இணைப்பில் METER CARD அளித்து முறையாக பதிவுகள் செய்து கொடுப்பது இல்லை தங்களுக்கு அளிக்கப்பட்ட METER CARD இல் நுகர்வோர் விபரங்கள், மின்பளு, வீ.ப. எண் டெபாசிட் இருப்புதொகை மின் இணைப்பு வழங்கப்பட்ட நாள் குறித்து எதுவும் பதிவு செய்யவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.21 கணக்கீடு செய்யும் பணியாளர் தங்களது மின் இணைப்பில் கணக்கீடு செய்த பின் அவரது கணக்கீடு பதிவு செய்யும் கருவியில் (CMRI) பதிவுகள் செய்துவிட்டு சென்றுவிடுவர் எனவும் METER CARD இல் முறையாக பதிவுகள் செய்து கொடுப்பது இல்லை எனவும், மேலும் ஒவ்வொரு மாதமும் KW MD மின்னளவியில் எவ்வளவு பதிவாகியுள்ளது என்பதை இது நாள் வரை பதிவு செய்து கொடுக்கவில்லை எனவும், இதனால் எந்த மாதத்தில் KW MD மின்னளவியில் உயர்ந்துள்ளது என அறியக்கூடிய சந்தர்ப்பம் தங்களுக்கு கிட்டவில்லை எனவும், மேலும் தாங்கள் மேற்கொள்ள வேண்டிய அடுத்த நடவடிக்கைக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.22 கணக்கீடு செய்யும், பணியாளர் அளவீடு செய்தபின், சில நாட்களில், தங்களது அலைபேசி எண்ணிற்கு SMS வரும் எனவும், அதில் தெரிவிக்கப்பட்ட மின் கட்டணத்தை இதுநாள் வரை செலுத்தி வந்ததாகவும், ஆகையால் தங்களுக்கு KW MD எவ்வளவுதான் பதிவாகியுள்ளது என்பது தெரியாது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.23 விசைத்தறிகள் தொடர்ந்து இயங்குவதால் KW MD-ஐ கவனிக்க வேண்டும் என்று Static Meter வழங்கப்பட்ட நாள் முதல் பிரிவு அலுவலர் தங்களுக்கு போதிய அறிவுரை வழங்கி இருந்தால், தங்களுக்கு தணிக்கை அறிக்கை வழங்கும் நிலைக்கு சென்றிருக்காது என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

*"ஆ.(2) Excess Demand charge*
*Whenever the consumer exceeds the sanctioned demand, excess demand charge shall be:-*
*II. In case of LT supply*

*After installation of the meter, if the recorded demand is in excess of contracted demand, the existing demand, shall, after intimation to the consumer, be revised to the level of recorded demand and all relevant Charges applicable for extension of additional demand shall be included in the next bill. No excess demand charge is livable till such time the licensee installs meter with demand recording facility and bring the consumer under the scope of excess demand chargeable category."*

5.24 மேற்கண்ட ஒழுங்குமுறை ஆணைய அறிவுரைப்படி, தாங்கள் அனுமதி பெற்ற மின்பளு 7.21 KW க்கு மேல் கீழ்க்கண்ட காலங்களில் பதிவான கூடுதல் மின் பளுவிற்கான எந்தவிதமான அறிவிப்பும் Meter Cardல் பதிந்து கொடுக்கவில்லை எனவும்,

| MONTH | RECORDED KW MD | MONTH | RECODED KW MD |
|---|---|---|---|
| 08/2015 | 10.58 KW | 8/2016 | 6.75 KW |
| 10/2015 | 7.97 KW | 10/2016 | 6.46 KW |
| 12/2015 | 6.34 KW | 12/2016 | 6.71 KW |
| 02/2016 | 6.59KW | 02/2017 | 6.85 KW |
| 04/2016 | 6.33 KW | 04/2017 | 6.06 KW |
| 06/2016 | 6.68 KW | 06/2017 | 6.10 KW |
| | | 08/2017 | 6.03KW |

5.25 மேற்கண்ட Recorded KW MD ஐ முன்கூட்டியே கணக்காளரோ, பிரிவு அலுவலகத்தில் உள்ள I.A/R.S கணக்கீட்டு அதிகாரிகள் அல்லது உதவிப் பொறியாளர் கப்பலூர் அவர்களோ தெரிவித்திருந்தால் 2014-2015 மற்றும் 2016-2017 (சுமார் மூன்று ஆண்டுகள்) BOAB AUDIT தணிக்கை அறிக்கை வழங்கும் நிலைக்கு சென்றிருக்காது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.26 TARIFF ORDER எண் 1/2017 நாள் 11.08.2017, தாழ்வழுத்த மின் கட்டணம் III A (2) மின் கட்டண அட்டவணைப்படி இந்த மின்கட்டண வகையின் கீழுள்ள மின்வளங்களுக்காக இணைப்பு பெற்ற மின்சுமை 12 KW-க்கு மேற்படுதல் ஆகாது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

> *"i. Load Limit for LT Tariff III-A Categories*
>
> *5.2.3. 19 TANGEDCO submitted that the present SMT Order specifies that the connected load for supply of electricity shall not exceed 10 HP in respect of LT Tariff III-A (1) and LT Tariff III-A (2). Consequent to introduction of static meter with MD recording facilities. It measures accurate measurements including electrical loss of motor. The consumers under this category are representing to enhance the load limit of 10HP. Considering lower efficiency motors that are used for power loom, TANGEDCO requested the Commission to modify the connected load for these categories to 10 KW instead of 10 HP.*
>
> *Commission's Views*
>
> *5.2.3.20 The commission finds merit in TANGEDCO's proposal. However, the Commission is of the view that even 10 KW may be insufficient, and has hence, modified the contracted load in respect of LT Tariff III-A (1) and LT Tariff III-A (2) to 12 kW instead of 10 HP.*
>
> *Page No.268*

*k) Extension of LT III B Tariff to LT III-A Tariff categories*

*5.2.3.24 TANGEDCO submitted that the present SMT Order permits to extend LT Tariff III B to all industries covered under LT Tariff III A (1) and IIIA (2) if the connected load of such industries exceeds 10 HP. The agriculture and allied activities are also covered under LT Tariff III A (1). Since agriculture and allied activities are not considered as industries, field officials are finding it difficult to convert such services under LT Tariff III B when connected load exceeds 10 HP. Considering the difficulties in converting the service, TANGEDCO requested the Commission to modify this clause as 'all services' instead of "all industries' covered under LT Tariff III A (1) and III A (2) and if the connected load of such industries exceeds 10 kW instead of 10 HP, as stated earlier.*

*Commission's View*

*5.23.25 The Commission does not find any merit in TANGEDCO's proposal to include agriculture and allied activities under LT III B Industries, as agriculture and allied activities cannot be categorised under industrial category*

*5.2.3.26 Further, as stated earlier, the Commission has modified the contracted load in respect of LT Tariff III-A (1) and LT Tariff III-A (2) to 12 kW instead of 10 HP.*

*Hence, all industries covered under LT IIIA (1) and LT III A (2) shall fall under LT III B category, if the connected load of such industries exceeds 12 kW."*

5.27 எனவே மேற்கண்ட (ஆ. முதல் ஈ) வரை உள்ள இனங்களின், பல்வேறு சந்தர்பங்கள் இருந்தும் தங்களுக்கு KW MD உயர்வு, மற்றும் அதனால் ஏற்படும் வீதப்பட்டி மாற்றம் அதற்கான கட்டண தொகை பற்றி அறிய வாய்ப்புகள் இல்லாமல் போய்விட்டது எனவும், இந்த நிகழ்வுகள் அனைத்தும் மின்வாரியத்தினர் நுகர்வோருக்கு உரிய AWARNESS ஐ. அந்தந்த காலகட்டத்தில் உருவாக்கவில்லை என தெளிவாகத் தெரிகிறதாகவும், தற்பொழுது பாதிக்கப்பட்டவர்கள் தங்களை போன்ற நுகர்வோர்கள் தான் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.28 மேற்கண்ட சங்கதிகள் மூலம் தங்களுக்கு ஏற்பட்ட நிகழ்வுகள் போல, கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டத்திற்க்கு உட்பட்ட சோமனூர் கோட்டத்தில், 295-003-811, T.F. III -A (1) and 295-003-592, T. .F.III-A (1), in the name of Thiru, M.Soundrarajan, 4/30 A, ஆயில்காரர் தோட்டம், சாமளாபுரம் (அஞ்சல்) மங்களம் வழி சோமனூர். அவர்களுக்கு சென்னை தமிழ்நாடு மின்சார மக்கள் குறைதீர்க்கும் மன்றத்தில், மேல்முறையீடு மனு எண். 60/2020 இன் மூலம் நடைபெற்ற விசாரணையில் தீர்வாக BOAB AUDIT தணிக்கை அறிக்கையின்படி தெரிவித்துள்ள நிலுவைத் தொகையை மின்

இணைப்பு எண் 295-003-811, T.E III A (1) இல் ரூ.1,16,982/- உம், மின் இணைப்பு எண் 295-003-592, T.F III -A (1) இல் ரூ. 2,47,507/- உம், சென்னை தமிழ்நாடு மின்சார மக்கள் குறைதீர்க்கும் மன்றத்தில் தள்ளுபடி செய்து தீர்வு அளித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.29 சென்ற 05-06-2023 அன்று, மேற்பார்வைப் பொறியாளர், மதுரை மின்பகிர்மான வட்டம், மதுரை அவர்களை நாடி, BOAB AUDIT தணிக்கை அறிக்கையின்படி தெரிவித்துள்ள நிலுவைத் தொகை ரூ. 1,55,392/- தள்ளுபடி செய்யாமல் மதுரை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தினர் தங்களது தீர்ப்பு கடிதம் க.எண். தலைவர்/ தமிநுகுதீம/மது/செய/கோ தமிநுகுதீ ஆணை/2023/ அ.எண்:722/23, நாள் 11-05-2023 மூலம் தீர்ப்பு வழங்கியதை தொடர்ந்து சென்னை தமிழ்நாடு மின்சார மக்கள் குறைதீர்க்கும் மன்றத்தில், மேல் முறையீடு தற்பொழுது சமர்பிக்கின்றோம் என்றும், அதுவரை தங்களது மின்இணைப்பு துண்டிக்கபட்டதால், கட்டிட உரிமையாளர் தாங்கள் இருந்த அதே கட்டிடத்திற்கு புதிய மின்இணைப்பு தணிக்கை நிலுவைத் தொகை காரணமாக மின்வாரியம் வழங்க மறுக்கிறது என கூறியதால், மேற்படி சிரமங்களை கருத்தில் கொண்டு கட்டிட உரிமையாளர் நலன் கருதி தணிக்கை நிலுவைத் தொகை செலுத்தவும் இனி S.ரேகா மீதுள்ள மின்இணைப்பு வேண்டியது இல்லை எனவும் முடிவு செய்து, தாங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை தங்களது மின்இணைப்பு மீது உள்ள வைப்பு தொகையை கணக்கில் எடுத்துக் கொண்டு. அதனை நிலுவைத் தொகையில் கழித்துவிட்டு மீதத்தொகையை செலுத்த சொன்னால், அந்த தொகையை UNDER PROTEST என்ற அடிப்படையில் செலுத்திவிடுகிறோம் என்று கூறியதற்கு, அதை ஏற்றுக்கொண்டு, உதவிகணக்கு அலுவலர் / திருமங்கலம் மூலம் மேற்கண்ட நிகழ்வுகளை கடிதம் அளித்து ஆவண செய்ய மேற்பார்வைப் பொறியாளர், மதுரை மின்பகிர்மான வட்டம், மதுரை அவர்கள் கூறியதாக அவர் தெரிவித்துள்ளார். அதன்படி உதவிகணக்கு அலுவலர் / திருமங்கலம் அவர்களுக்கு 05-06-2023 நாளிட்ட கடிதம் அளித்து, அதில் சென்னை தமிழ்நாடு மின்சார மக்கள் குறைதீர்க்கும் மன்றத்தில் தங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வரும்போது, மேற்கண்ட BOAB AUDIT தணிக்கை ரூ. 1,55,392/- ஐ திரும்ப வழங்க வேண்டும் (REFUND OF AUDIT AMOUNT) எனவும் வலியுறுத்தப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.30 எனவே தலைவர் மதுரை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தினர் தங்களது தீர்ப்பு கடிதம் க.எண். தலைவர்/தமிநுகுதீம/மது/செய/கோ. தமிநுகுதீ ஆணை/2023/ அ.எண்.722/23, நாள் 11-05-2023, மூலம், BOAB AUDIT தணிக்கை அறிக்கையின்படி தெரிவித்துள்ள நிலுவைத் தொகை ரூ.1,55,932/- ஐ. செலுத்தும்படி கூறிய உத்தரவை ரத்து செய்து தரும்படி மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 தொழிற்பேட்டை கப்பலூர் பிரிவில் மின்இணைப்பு எண்:136-004-269 TF IIIA2 என்ற மின்இணைப்பு திருமதி.S.ரேகா அவர்களின் பெயரில் வழங்கப்பட்டிருந்ததாகவும், இந்த மின்இணைப்பில் அனுமதிக்கப்பட்ட மின்பளு 7.21KW எனவும், இந்த மின்இணைப்பினை பயன்படுத்தி திருமதி.S.ரேகா அவர்கள் விசைத்தறிகள் இயக்கி வந்ததாகவும் இந்த மின் இணைப்பு 26.03.2011 அன்று வழங்கப்பட்டதாகவும், இந்த மின் இணைப்பிற்கு 10HP (7.46KW) மின்பளு மட்டுமே Tariff order ன் படி வரையறுக்கப்பட்டுள்ளதாகவும், இந்த மின்இணைப்பில் Demand Recording Facility உள்ள Static meter பொறுத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 ஆனால் திருமதி.S.ரேகா அவர்கள் கீழ்க்கண்ட மாதங்களில் வரையறுக்கப்பட்ட 7.46KW மின்பளுவை விட கூடுதலாக மின்பளு பயன்படுத்தியுள்ளார் எனவும்

| Month | Year | Recorded MD |
|---|---|---|
| 04 | 2015 | 10.76 KW |
| 06 | 2015 | 8.49 KW |
| 08 | 2015 | 10.58 KW |
| 10 | 2015 | 7.97 KW |

6.3 இதிலிருந்து திருமதி.S.ரேகா அவர்கள் வரையறுக்கப்பட்ட மின்பளு அளவான 7.46KW ற்கு அதிகமாக பயன்படுத்தியுள்ளார் என்பது தெளிவாக தெரிவதாகவும், Tariff order dated 11.08.2017ல் தான் TF IIIA2 மின்இணைப்பிற்கு வரையறுக்கப்பட்ட மின்பளு 7.46KW ல் இருந்து 12KW ஆக மாற்றப்பட்டுள்ளதாகவும், அதன்பிறகு திருமதி.S.ரேகா அவர்கள் தன்னுடைய மின்இணைப்பில் மின்பளு 12 KW ற்குள் பயன்படுத்தியுள்ளார் எனவும், இதற்கிடையில் 12KW BOAB ற்குள் தான் Audit குழு இம்மின் இணைப்பில் Consumer Ledger ஐ Audit செய்து Audit slip number: 67, Dt:17.10.2016 அன்று இம்மின்

இணைப்பின் வீதப்பட்டியை மின்பளு 7.46KW ற்கு மேல் பயன்படுத்தியதால் வீதப்பட்டி IIIA2ல் இருந்து வீதப்பட்டி IIIBக்கு மாற்றம் செய்து 08/2015 முதல் 08/2016 வரை மேல்முறையீட்டாளர் உபயோகப்படுத்திய 21960 யூனிட்டிற்கு வீதப்பட்டி IIIB ல் கணக்கீடு செய்து ஏற்கனவே மேல்முறையீட்டாளர் செலுத்திய தொகையான ரூ.81,909/– ஐ கழித்து மீதம் இழப்பீடாக ரூ.69,899/– ஐ திருமதி.S.ரேகாவிடம் வசூல் செய்ய Audit Slip கொடுத்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 இந்த இழப்பீட்டுத் தொகையான ரூ.69,899/–ஐ வசூல் செய்ய முயற்சி எடுக்கப்பட்டதாகவும், அதன்பிறகு இந்த மேல்முறையீட்டாளர் சார்ந்துள்ள அமைப்பான Kappalur Industrialist Association லிருந்து மேற்பார்வை பொறியாளர் மதுரை அவர்களிடம் முறையீடு செய்ததால் இந்த இழப்பீட்டுத் தொகை வசூல் செய்வது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மீண்டும் BOAB Audit 2018 ஆம் ஆண்டு இம்மின் இணைப்பை Audit செய்ததில் தொடர்ந்து இம்மின் இணைப்பு 08/2016–க்கு பிறகும் Tariff III B ல் Billing செய்யாமல் TF IIIA2 விலேயே Billing செய்யப்பட்டது Audit குழுவினரால் கண்டறியப்பட்டதாகவும், அதனால் Audit குழு Audit Slip number 18, dt:29.06.2018 மூலம் 10/2016 முதல் 18.08.2017 வரை மேல்முறையீட்டாளர் உபயோகப்படுத்திய யூனிட்டிற்கு TF IIIB ல் Bill செய்து இழப்பீட்டுத் தொகை ரூ.86,039/–யை வசூல் செய்ய Audit slip வழங்கப்பட்டதாகவும், எனவே ஏற்கனவே 17.10.2016 தேதியிட்ட Audit Slip number 67ன் மூலம் இழப்பீட்டுத் தொகை ரூ.69,899/– மற்றும் 29.06.2018 தேதியிட்ட Audit slip number 18ன் மூலம் வசூல் செய்ய வேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூ.86,039 /– ஆக மொத்தம் சேர்த்து ரூ.1,55,938/– யை திருமதி S.ரேகா அவர்கள் மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு செலுத்த வேண்டியிருந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 இம்மின் இணைப்பிற்குரிய வெள்ளை அட்டையில் மேல்முறையீட்டாளர் பயன்படுத்திய யூனிட் மின்பளு மற்றும் செலுத்த வேண்டிய தொகை அந்தந்த மாதங்களிலேயே குறித்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும், எனவே மேல்முறையீட்டாளருக்கு தான் பயன்படுத்திய மின்பளு அனுமதிக்கப்பட்ட மின்பளுவை விட அதிகமாக பயன்படுத்தியது நிச்சயமாக தெரியவரும் எனவும், Audit குழு அறிக்கையின் படி இம்மின்

இணைப்பை TF IIIA2 விலிருந்து TF IIIB க்கு Tariff order படி மாற்றி இழப்பீட்டுத் தொகையை கேட்டது சரியே, என்றும் மேல்முறையீட்டாளர் கூறியது போல் Rewinding செய்யப்பட்ட மோட்டார்கள் பயன்படுத்தியதால் மின்பளு உயர்ந்தது என்பதை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் ஏற்றுக்கொள்ள இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 Static Meter ல் பதிவாகியுள்ள மின்பளு மற்றும் Power Factor ஆகியவை CMRI கொண்டு பதிவிறக்கம் செய்தால் 12 Reset Value மட்டுமே computer ல் process செய்து எடுக்க முடியும் எனவும், மேல்முறையீட்டாளர் 2015 மற்றும் 2016 ஆகிய காலங்களுக்கு உண்டான CMRI report யை 2023 ல் கோரியதால் மேற்சொன்ன காலத்திற்கான CMRI report கொடுக்க இயலவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேல்முறையீட்டாளர் சார்ந்துள்ள Kappalur industrialist Association மதுரை மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் 17.03.2020 அன்று மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு 136–004–269 மற்றும் 7 மின் இணைப்புகள் ஆக மொத்தம் 8 மின் இணைப்புகளுக்கு BOAB Audit கூறிய இழப்பீட்டுத் தொகையை மேற்கூறிய 8 மின் இணைப்புகளுக்கும் தள்ளுபடி செய்யுமாறு முறையிட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மதுரை மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் கடந்த 10.09.2020 அன்று விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கியதாகவும், மன்றத்தின் தீர்ப்பு திருப்தி அளிக்கவில்லை என்றால் அவர்கள் தமிழ்நாடு மின்குறை தீர்ப்பாளர் / சென்னை அவர்களிடம் மேல்முறையீடு செய்திருக்க வேண்டும் எனவும் அவ்வாறு அவர்கள் குறித்த காலத்திற்குள் மேல்முறையீடு செய்யவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 ஆனால் அதே கோரிக்கையுடன் திருமதி.S.ரேகா அவர்கள் தனியாக மதுரை மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் 03.03.2023 அன்று முறையீடு செய்துள்ளதாகவும், இம்முறையீட்டினை விசாரித்து மதுரை மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் இழப்பீட்டு தொகையை செலுத்த உத்தரவிட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 அதன் பிறகு மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின்இணைப்பை Surrender செய்து permanent Dismantling செய்து தருமாறு விண்ணப்பித்ததாகவும், இம்மின் இணைப்பு நிரந்தர மின்துண்டிப்பு செய்த பிறகு எவ்வளவு காப்புத்தொகை மீதம் இருக்கிறதோ அதை Audit ல் கூறிய இழப்பீட்டுத் தொகையில் கழித்துக் கொண்டு மீதி இழப்பீட்டுத் தொகையை செலுத்துவதாக மேல்முறையீட்டாளர் கூறியதாகவும், அதன்படியே அவருடைய மின்இணைப்பை நிரந்தர மின்துண்டிப்பு செய்து மீதியிருந்த காப்புத்தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையில் கழித்துக் கொண்டு மீதி இழப்பீட்டுத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.12 BOAB Audit குழு வசூல் செய்ய கூறிய இழப்பீட்டுத் தொகையான ரூ.1,55,938/- யை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு முறையீட்டாளர் செலுத்த கடமைப்பட்டுள்ளதாகவும், அவ்வாறே அவர் இழப்பீட்டுத் தொகையையும் செலுத்தியுள்ளதாகவும், அவர் செலுத்திய இழப்பீட்டுத் தொகையை திரும்ப வழங்க இயலாது எனவும், எனவே மேற்கூறிய காரணங்களினால் மேல்முறையீட்டாளரின் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 இம்மேல்முறையீடு சம்பந்தமாக கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களின்மூலம் அறியவருவது மேல்முறையீட்டாளர் Kappalur Industrialist Association மூலமாக அவர்களுடைய மின்னிணைப்பின் தணிக்கை தொகை சம்பந்தமாக மதுரை மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் 2020-இல் முறையீட்டு மனு அளித்து அந்த மனுவிற்கு தீர்வும் வழங்கப்பட்டுள்ளது. அம் மனுவின் கோரிக்கை பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

> *"பொருள்: தணிக்கை தொகை தள்ளுபடி - சம்பந்தமாக (Tariff III A2)*
> *xxx*
> *xxx*

*இந்த சூழ்நிலையில் ஒரு சில உறுப்பினர்கள் 11.08.2015–க்கு முன்பு Maximum Demand அதிகரித்த காரணத்தினால் தங்களின் மின்வாரிய அலுவலகத்தில் இருந்து தணிக்கைத் தொகையை கட்டுமாறு கேட்டிருந்தீர்கள். கடந்த 25.12.2017 தேதியன்றே திருமங்கலம் கோட்டப் பொறியாளர் தலைமையில் கப்பலூர் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி மின் பொறியாளர் அவர்கள் தொழிற்கூடத்தில் நேரில் ஆய்வு மேற்கொண்டு பயன்படுத்தப்படும் மின் உபகரணங்களில் மின்பளு சரியாக மற்றும் கட்டுக்குள் உள்ளது என உறுதி செய்தார்கள். மேலும் இது தொடர்பான அறிக்கையினையும் சமர்ப்பித்துள்ளார்கள். தற்போது 4 இயந்திரங்களை மட்டும் கொண்டு இயக்கி வருவதால் Maximum Demand கண்டிப்பாக கூடுதலுக்கு வாய்ப்புகள் இல்லை. மேலே குறிப்பிட்ட தவறுகள் அறியாமல் நடந்ததாகும்.*

*136–004–165 – அகிலாண்ட ஈஸ்வரி டெக்ஸ்*
*136–004–208 – குமார் டெக்ஸ்*
*136–004–251 – அம்சபிரபா*
*136–004–269 – ரேகா*
*143–001–219 – MR பேப்ரிக்ஸ்*
*143–001–230 – அன்பு விக்னேஷ் வீவிங்*
*143–001–256 – ராம்காட்*
*143–001–330 – வளத்தி டெக்ஸ்*

*ஆகவே, தாங்கள் கொடுத்த நோட்டீசை தற்காலிகமாக நிறுத்தி வைத்து தணிக்கை தொகையை நிரந்தரமாக தள்ளுபடி செய்ய ஆவண செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்."*

7.3 மேற்கூறிய கோரிக்கை சம்பந்தமாக 10.09.2020 அன்று மதுரை மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் தன்னுடைய ஆணையை வழங்கியுள்ளது. அந்த ஆணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"11.08.2017 க்கு முன்னர் விசைத்தறி மின் இணைப்புகளுக்கு அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட மின்பளு 7.46KW முறையீட்டாளர் அசோசியேசன் உறுப்பினர்களின் மின் இணைப்புகளில் மேற்கண்ட 7.46KW மின் பளுவிற்கும் கூடுதலாக 2 முறை மின் பளு பயன்பாடு பதிவானதன் காரணமாக அம்மின் இணைப்புகளை IIIA2 வீதப்பட்டியல் இருந்து IIIB வீதப்பட்டி பிரிவிற்கு மாற்றம் செய்து அதற்காக மின் நுகர்வோர் செலுத்த வேண்டிய நிலுவை தொகை தணிக்கை பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசைத்தறி உரிமையாளர்களின் சங்கங்கள் சார்பில் மேற்கொள்ளப்பட்ட முறையீடு காரணமாக 7.46KW என்ற மின்பளு வரம்பு உயர்த்தப்பட்டு 11.8.2017 முதல் 12KW என உத்தரவிடபட்டுள்ளது. எனவே 11.08.2017க்கு முந்தைய காலத்தில் பதிவான கூடுதல் மின்பளு பயன்பாட்டிற்கான தணிக்கை ஆட்சேபனை தொகையினை ரத்து செய்ய*

*வேண்டும் என்ற கோரிக்கையானது கொள்கை முடிவாகும். எனவே முறையீட்டாளரின் கோரிக்கை தொடர்பாக தலைமை அலுவலகத்திற்கு வழிகாட்டுதல் வேண்டி கடிதம் சமர்பித்து அதன் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என எதிர்மனுதாரருக்கு உத்தரவிட்டு இம்மன்றத்தால் தீர்வு செய்யப்படுகிறது செலவு தொகை இல்லை.*

*மேலும், இத்தீர்பாணை திருப்தி அளிக்காதபட்சத்தில் தமிழ்நாடு மின்குறை தீர்ப்பாளர் சென்னை அவர்களிடம் கீழ்கண்ட முகவரியில் இந்த ஆணை கிடைக்கப்பெற்ற தேதியில் இருந்து 30 தினங்களுக்குள் மேல்முறையீடு செய்துகொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது."*

7.4 ஆனால் மேல்முறையீட்டாளர் தன்னுடைய மனுவில் மேற்கூறிய ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு 30 தினங்களுக்குள் மின்குறைதீர்ப்பாளருக்கு மேல்முறையீடு செய்யவில்லை என ஒப்புக் கொண்டுள்ளார். அவ்வரிகள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

*"ஆனால் மேற்கண்ட தீர்வுக்கு, Kappalur Industrialist Association அவர்கள் சென்னை தமிழ்நாடு மின்சார மக்கள் குறைதீர்க்கும் மன்றத்தில் முறையீடு செய்யவில்லை"*

7.5 மேற்கூறிய மதுரை மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் 2020 ஆணைக்கிணங்க பெரும்பான்மை உறுப்பினர்கள் தணிக்கை தொகையை செலுத்திவிட்ட நிலையில் இந்த மேல்முறையீடு மனு மீண்டும் அதே மின்னிணைப்புகளுக்காக செய்திருப்பதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 இந்நிலையில், மேல்முறையீட்டாளர் மதுரை மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு 2023–இல் அளித்த மனுவின் கோரிக்கை பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

*xxx*
*xxx*
*பொருள்: மி.இ.எண் 136–004–269, III A(2) கப்பலூர் பகிர்மானம் – வாரியத் தணிக்கைக்குழு செலுத்தக் கோரியுள்ள தொகை ரூ. 1,55,938/–ஐ தள்ளுபடி செய்யக்கோருவது தொடர்பாக*

*-----*

*மதுரை மின்பகிர்மான வட்டம் திருமங்கலம் கோட்டம் கப்பலூர் உபகோட்டம் கப்பலூர் பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட கப்பலூர் மின்பகிர்மானம் மின் இணைப்பு எண் 136–004–269, Tf IIIA(2) 26.03.2011–ல் பெற்று விசைத்தறித்தொழில் நடத்தி வருகிறன்.*

*BOAB Audit 2014-2015 மற்றும் 2016-2017 செய்யப்பட்ட தொகையை (Rs.1,55,938/-) இக்கடிதம் பெறப்பட்ட 15 தினங்களுக்குள் செலுத்துமாறு" தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*xxx*

*xxx*

*xxx*

*எங்களது கோரிக்கையை ஏற்று நாங்கள் செலுத்த வேண்டும் என்று கோரப்பட்ட தொகையை தள்ளுபடி செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

*xxx*

*xxx*

*xxx*

*எனவே, மேற்கண்ட சூழலில் எங்களுக்கு அறிவிப்பு ஏதும் அளிக்காமல் தாங்களாகவே contracted Demand-ஐ அதிகரித்துள்ளதற்கு அபராதமாக விதிக்கப்பட்டுள்ள தொகை ரூ.1,55,938/-ஐ ரத்து செய்து நலிவடைந்துள்ள விசைத்தறித் தொழிலாளியின் குடும்பத்திற்கு உதவி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்."*

7.7 மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு மனுக்களையும் ஆராயும் போது, மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறைதீர்மன்றத்திற்கு 2020-இல் சமர்ப்பித்த கோரிக்கையும் 2023-இல் சமர்ப்பித்த கோரிக்கையும் ஒரே பொருள் ஒரே கோரிக்கை ஒரே மின் இணைப்பு சம்பந்தமாக இருப்பதும், மதுரை மின் நுகர்வோர் குறைதீர்மன்றம் ஏற்கனவே விசாரிக்கப்பட்டு ஆணை வழங்கப்பட்ட கோரிக்கை சம்பந்தமாக மறு விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கியிருப்பதும் தெரியவருகிறது. மேலும், மேல்முறையீட்டாளர், கோரிக்கைக்கான நிகழ்வு ஏற்பட்ட 2017 காலகட்டத்தில் அது தொடர்பாக மனு ஏதும் செய்யவில்லை என ஒப்புக் கொண்டுள்ளார்.

7.8 இது சம்பந்தமாக மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகள் 2004, விதி 5-ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"5. மன்றத்தால் எடுத்துக் கொள்ளக்கூடிய குறைகளின் வகைகள்:***

*இந்த ஒழுங்குமுறை விதிகளில் பிரிவு 2(ஊ)ல் வரையறுக்கப்பட்ட எந்த வித குறைகளையும்/முறையீடுகளையும் மன்றம் ஏற்றுக் கொள்ளலாம். இருந்தாலும் 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின்படி, நுகர்வோரின் குறைகளான,*

*i) பிரிவு 126ல் விவரிக்கப்பட்டபடி அங்கீகரிக்கப்படாத முறையில் மின்சாரம் உபயோகித்தல், மற்றும்*

*ii) பிரிவு 135 முதல் 141 வரை விவரிக்கப்பட்ட குற்றங்களும் தண்டனைகளும். மன்றத்தின் வரம்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது."*

7.9 மேற்கூறிய விதியை ஆராயும்போது, நுகர்வோர் ஒழுங்குமுறை விதிகளில் பிரிவு 2(ஊ)ல் வரையறுக்கப்பட்ட எந்த வித முறையீடுகளையும் மன்றத்தில் சமர்ப்பிக்கலாம் என்று கொடுக்கப்பட்டுள்ளதே ஒழிய, ஆணை வழங்கப்பட்ட அதே பொருள் சம்பந்தமான முறையீட்டை மீண்டும் சமர்ப்பிக்கலாம் என்று கொடுக்கப்படவில்லை.

7.10 மேலும், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகள் 2004, விதி 17(4)–ன்படி முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும், மேலும் அவ்வாறு பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். இவ்வழக்கில் மதுரை மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தால் 10.09.2020 அன்று தீர்வு வழங்கப்பட்டு பெரும்பான்மையான நுகர்வோர்கள் தணிக்கை தொகையை செலுத்திவிட்டார்கள். மேலும், குறைதீர் மன்றம் ஆணை வழங்கிய தேதியிலிருந்து இருந்து ஒரு மாத காலத்திற்குள் மேல்முறையீடு எதுவும் செய்யப்படவில்லை. ஆனால் அதே பொருள் குறித்து மீண்டும் மின் நுகர்வோரால் குறைதீர் மன்றத்தில் 2023–இல் முறையீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதி 18–ன்படி இம்மேல்முறையீட்டு மனுவிலுள்ள கோரிக்கைகள் மீண்டும் பரிசீலிக்க தகுந்ததல்ல என்பதால் இம்மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

7.11 மேலும், மதுரை மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் 2020–ல் செய்யப்பட்ட முறையீட்டிற்கு ஆணை வழங்கிய நிகழ்வில் மீண்டும் 2023–இல் அதே கோரிக்கை தொடர்பாக ஆணை வழங்கிய செயல்முறை தவறான முன் உதாரணமாகவும், காலங்கடந்த நிகழ்விற்கு மறுவாய்ப்பு கொடுப்பதாகவும் தெரிய வருகிறது. இது ஒரே பொருள் சம்பந்தமாக மறுவிசாரணை செய்ய வழிவகுக்கிறது. இனிவரும் காலங்களில் இதை கவனத்தில் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**8.0 முடிவுரை:**

8.1 மேற்கண்ட பத்தி 7–ல் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டு மனு எண் 44/2023 மற்றும் 45/2023 ஆகியவற்றில் உள்ள கோரிக்கைகள், மின் நுகர்வோர்

குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதி 18–ன்படி மீண்டும் பரிசீலிக்க தகுந்ததல்ல என்பதால் தள்ளுபடி செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 44/2023 மற்றும் 45/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:

1. திருமதி S. ரேகா, – By RPAD
121/75A, 1st Cross, New Fair lands,
சேலம் – 636 106.

2. திருமதி M. அம்சபிரபா, – By RPAD
121/75A, 1st Cross, New Fair lands,
சேலம் – 636 106.

3. உதவி மின்பொறியாளர்/தொழிற்பேட்டை/கப்பலூர்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS வளாகம், தொழிற்பேட்டை,
கூத்தியார்குண்டு, கப்பலூர் – 625 008.

4. செயற்பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS வளாகம், உசிலம்பட்டி ரோடு,
திருமங்கலம் – 625 706.

5. மேற்பார்வை பொறியாளர்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ரேஸ் கோர்ஸ் ரோடு, K, புதூர், மதுரை – 625 007.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.